**கவனிக்க.**- 2006.10.13 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி IV (அ) பிரசுரிக்கப்படவில்லை.


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1469 - 2006 ඔක්තෝබර් 27 වැනි සිකුරාදා - 2006.10.27

1469 ஆம் இலக்கம் - 2006 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 27 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவைசெய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 1004 |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 1008 |


வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான

### முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் ஒவ்வொரு பகுதியினதும் ஒவ்வொரு தொகுதியின் இறுதியிலும் ஒவ்வொரு மாதத்தின் முதல் வார வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருக்கும் வாராந்த வர்த்தமானியிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் தேதிகள், நேரங்கள் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதியிலும் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசி நாள் **வர்த்தமானியில் அறிவித்தல் பிரசுரமாகும் தேதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியாகும்.** வெற்றிடங்களுக்கான விண்ணப்பங்களுக்கும் கேள்விப்பத்திரங்களுக்கும் கடைசித் தேதியும் நேரமும், ஏல விற்பனைக்குத் தேதியும் நேரமும் குறிக்கும் அறிவித்தல்கள் தயாரிக்கப்படும்போது மேற்கண்ட மாற்றத்துக்குக் கவனஞ் செலுத்துமாறும் பிரசுரமாகும் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறையுள்ளவர்கள் ஆக்கபூர்வமாகவும் வெற்றிகரமாகவும் பங்குகொள்வதற்கியலும் வகையில் அறிவித்தல்கள் அரசாங்க அச்சகத்திற்கு அனுப்பப்படச் செலவாகும் நேரத்தையும் அவை பிரசுரமாகும் தேதியையும் கருத்திற் கொள்ளுமாறும் எல்லா அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆதியன அறிவுறுத்தப்படுகின்றன.

வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கான எல்லா அறிவுறுத்தல்களும் கண்டிப்பாக அவை பிரசுரமாகும் தேதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு முன்** இத்திணைக்களத்தை வந்தடைய வேண்டும். அதாவது 2006, நவெம்பர் 03 ஆந் தேதி வெள்ளிக்கிழமை வர்த்தமானியிற் பிரசுரிக்கப்பட வேண்டிய அறிவித்தல்கள் 2006, ஒற்றோபர் 20 ஆந் தேதி நண்பகலிலோ அதற்கு முன்னரோ அரசாங்க அச்சகத்தை வந்தடைய வேண்டும்.

**லக்ஷ்மன் குணவர்தன,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2006 ஆம் வருடம் சனவரி மாதம் 01 ஆந் திகதி.

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

*1.1* விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

*1.2* சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக் குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).

*1.3* சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரசகரும மொழித்தேர்ச்சிச் சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

*2.1* நிதி ஒழுங்கு விதிகள், தாபனக் கோவை திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக் காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

*2.2* அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம். அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

*2.3* அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

*3.1* நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்க வேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

*3 : 1 : 1* சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்தி வைக்கலாம்.

*3 : 1 : 2* சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக்கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

*3 : 1 : 3* சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

*3 : 1 : 4* அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடை நிறுத்தப்படும். அந்த இடை நிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் சித்தி எய்தும் வரையில் அல்லது 3:1:6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

*3 : 1 : 5* அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

*3 : 1 : 6* இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

*3 : 1 : 7* அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

*3 : 1 : 8* தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்த்து) தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமரத்தும் நியதிகள் :**

*4.1* நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அனாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவு தொகையாக வழங்குதல் வேண்டும்.

*4.2* நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவு தொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்தி நிதியத்துக்குத் தனது உதவு தொகையாக அரசாங்கம் செலுத்தும்.

*4.3* அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிச் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

*4.4* ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின் கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளன் கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்த போதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின் கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

*5.1* ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவயாற்றிவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழு நேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரச சேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

*6.1* எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்த மட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

*6.2* விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்படமாட்டாது.

*6.3* விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

*6.4* விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

*6.5* விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

*7.1* தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம், படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

*1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.*

எல்லாப்பரீட்சார்த்திகளும்கீழ்வரும்விதிகளுக்கமைய நடந்து கொள்ள வேண்டும். விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளரின் விரகின்படி கீழ்க்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.

(i) முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்தி வைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்தி வைக்கப்படுவர்;

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர்;

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர்.

(iv) சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர்;

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப் படுவர்;

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலி சாரிடம பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்துவிடல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சாதிகாரி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவான தாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை அதிகாரசபையால் பரிசீலனை செய்வதற்குறப்பட்டதாகும்.

1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்தி களுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும் போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்து கொள்ளுதல் வேண்டும்.

2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும் பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரதும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவி செய்தல் வேண்டும்.

3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படமாட்டார். பரீட்சை உத்தி யோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

4. மேற்பார்வையாளரால் ஒழுங்கு செய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்கு செய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்து கொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்படமாட்டாது.

6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வேறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்து கொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப் பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்படமாட்டார். இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப் படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்து கொண்ட தாகக் கருதப்படுவர்.

9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பரு மட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள் களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச் செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப் படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.

10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறு மொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்தி லேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம், முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களை விட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப் பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக்கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை , மாட்டுத்தாள், முதலிய வற்றையோ வைத்திருக்கக்கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.

12. பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம் வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக்கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த் தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிடவேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

B2-B 079397

13. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவி செய்யவும் அப் பரீட்சார்த்தியடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங் கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்கு மேல் விடக்கூடாது.

14. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப் பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும் பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப்பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

**பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும்.**

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்தலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப்பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக் கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப் படக்கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்று பத்திரங்கள் உம்மிட மிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங் களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டு வரமறந்து போனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனிரேகைத் தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வை யாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றை யும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக்கருவிகள், பென்சில். அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப்பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டு வருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந் தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப் பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளின் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்று சேர்த்து இடது பக்கத்து மேல் மூலையில் (வலது பக்க மேல் மூலையிலன்று) உமக்கு கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களை நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.

பரீட்சை ஆணையாளர் நாயகம்.

இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பதவிகள்-வெற்றிடம்

## இலங்கை பொலிஸ் திணைக்களம்

உப பொலிஸ் பரிசோதகர், பொலிஸ் கொஸ்தாபல், பொலிஸ் கொஸ்தாபல் சாரதி பதவிகள் (விசேட அதிரப்படை)

இலங்கை பொலிஸ் திணைக்களத்தில் உப பொலிஸ் பரிசோதகர், பொலிஸ் கொஸ்தாபல், பொலிஸ் கொஸ்தாபல் சாரதி பதவிகளுக்கு இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. கீழ்க்காணும் வகையில் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் "பணிப்பாளர், ஆட்சேர்ப்பு, ஆட்சேர்ப்பு அலுவலகம், 2 ஆம் மாடி, புதிய செயலகக் கட்டிடம், கொழும்பு 01" என்ற முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும். விண்ணப்பம் வைத்து அனுப்பப்படும் உறையின் இடப்பக்க மேல் மூலையில் "உப பொலிஸ் பரிசோதகர், பொலிஸ் கொஸ்தாபல், பொலிஸ் கொஸ்தாபல் சாரதி (விசேட அதிரடிப்படை)" என குறிப்பிட்டு பதிவுத்தபாலில் 2006.11.27 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன் மேகுறிப்பிட்ட முகவரியை வந்தடையுமாறு அனுப்பப்பட வேண்டும். தாமதித்து பெறப்படும் விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட மாட்டாது என்பதுடன் பொலிஸ் திணைக்களத்தினால் விண்ணப்பங்கள் வழங்கப்படமாட்டாது.

**3. சம்பள அளவுத் திட்டம் :**

* *தகுதிகூர் நிலை உப பொலிஸ் பரிசோதகர் பதவி (அதிரடிப்படை).- ரூபா1,84,200-7 X 1,800-2 X 2,520 - 25 X 3,480- ரூபா 2,88,840.*

* *பயிலுனர் பொலிஸ் கொஸ்தாபல் பதவி (அதிரடிப்படை).- ரூபா1,66,560-7 X 1,440-27 X 1,800 - ரூபா 2,25,240.*

* *பொலிஸ் கொஸ்தாபல் சாரதி பதவி (விசேட அதிரடிப்படை).- ரூபா1,66,560-7 X 1,440-27 X 1,800 - ரூபா 2,25,240.*

(அ) சகல சீருடைகளும் இலவசமாக வழங்கப்படும்.

(ஆ) விளையாட்டுத் திறனை வளர்ப்பதற்கு உதவி வழங்கப்படும்.

(இ) கடமைக்கான பிரயாணச் செலவுகள், கஷ்டமான சேவைகளுக்காகவும் அத்துடன் திறமையான கடமைகளை நிறைவு செய்வதற்காகவும் வெகுமதியாகப் பணம் வழங்கப்படும்.

**4. தேவையான அடிப்படைத் தகைமைகள் :**

(அ) *வயதெல்லை :*

* தகுதிகூர் நிலை உப பொலிஸ் பரிசோதகர் பதவி (அதிரடிப்படை).- வர்த்தமானி அறிவித்தலின்படி விண்ணப்ப முடிவுத் திகதியில் 18 இல் இருந்து 25 வயதிற்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும்.

* பயிலுனர் பொலிஸ் கொஸ்தாபல் பதவி (அதிரடிப் படை).- வர்த்தமானி அறிவித்தலின்படி விண்ணப்ப முடிவுத் திகதியில் 18 இல் இருந்து 25 வயதிற்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும்.

* பொலிஸ் கொஸ்தாபல் சாரதி பதவி (விசேட அதிரடிப்படை).- வர்த்தமானி அறிவித்தலின்படி விண்ணப்ப முடிவுத் திகதியில் 19 இல் இருந்து 26 வயதிற்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும்.

(ஆ) *கல்வித் தகைமைகள் :*

* தகுதிகூர் நிலை உப பொலிஸ் பரிசோதகர் பதவி (அதிரடிப்படை).- க. பொ. த. (சா.த.) பரீட்சையில் கணிதம், ஊடக மொழி உட்பட 04 பாடங்களில் திறமைச் சித்திகளுடன் 06 பாடங்களில் ஒரே தடவையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். க. பொ. த. (உ./த.) பரீட்சையில் ஒரே தடவையில் 03 பாடங்களில் சித்தியெய்தியிருக்கவும் வேண்டும்.

* பயிலுனர் பொலிஸ் கொஸ்தாபல் பதவி (அதிரடிப் படை).- க. பொ. த. (சா.த.) பரீட்சையில் கணிதம், ஊடக மொழி அடங்கலாக ஒரே தடவையில் 06 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

* பொலிஸ் கொஸ்தாபல் சாரதி பதவி (விசேட அதிரடிப்படை).- க. பொ. த. (சா.த.) பரீட்சையில் கணிதம், ஊடக மொழி அடங்கலாக ஒரே தடவையில் 06 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**குறிப்பு 1.-** இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் வகைப்படுத்தலின்படி பாடங்களின் எண்ணிக்கையைக் கணக்கிலெடுக்கும்போது விஞ்ஞான பாட இலக்கங்கள் 41 உம் 44 உம் ஒரு பாடமாகவும், இல. 42, 45 ஐக் கொண்ட கணித பாடங்கள் ஒரு பாடமாகவும் கருதப்படும். க.பொ. த. (சா.த.) பரீட்சையில் சித்தியடைந்த பாடங்களின் எண்ணிக்கை அதன் பிரகாரம் தீர்மானிக்கப்படும்.

**குறிப்பு 2.-** க. பொ. த (சா.த.) பரீட்சையின் எழுத்துப் பரீட்சையில் தொழிநுட்ப பாடத்தில் சித்தியடையாமல் அதே பாடத்தில் செயல்முறைப் பரீட்சையில் சித்தியடைந்திருந்தபோதும் அப்பாடத்தில் சித்தியடையாததாக கருதப்படும்.

**குறிப்பு 3.-** விருப்பத்துக்குரிய தமிழ், ஆங்கிலம், சிங்கள பாடங்கள் க. பொ. த (சா.த.) பாடத்திட்டத்துக்குள் உள்ளடக்கப்படாமையால் அப்பாடங்களில் சித்தி பெறுதல் க. பொ. த. (சா.த.) பரீட்சையில் சித்தியடைந்த பாடங்களாகக் கருதப்படமாட்டாது.

(இ) *பௌதீக தகைமைகள் :*

* தகுதிகூர் நிலை உப பொலிஸ் பரிசோதகர் பதவி (அதிரடிப்படை).- *உயரம்* : 5 அடி 6 அங்குலம் (ஆகக் குறைந்தது) ; *மார்பு* : 32 அங்குலம் (ஆகக் குறைந்தது மூச்சு விட்டநிலையில்)

* பயிலுனர் பொலிஸ் கொஸ்தாபல் பதவி (அதிரடிப் படை).- *உயரம்* : 5 அடி 4 அங்குலம் (ஆகக் குறைந்தது) ; *மார்பு* : 30 அங்குலம் (ஆகக் குறைந்தது மூச்சு விட்டநிலையில்)

* பொலிஸ் கொஸ்தாபல் சாரதி பதவி (அதிரடிப்படை).- *உயரம் :* 5 அடி 3 அங்குலம் (ஆகக் குறைந்தது) ; *மார்பு :* 30 அங்குலம் (ஆகக் குறைந்தது மூச்சு விட்டநிலையில்)

**குறிப்பு**.- சிறந்த விளையாட்டுத் திறமையுடைய, தேசிய மட்டத்தில் விளையாட்டுப் போட்டிகளில் திறமை காட்டியுள்ள அல்லது சர்வதேச போட்டிகளில் பங்குபற்றி இலங்கைக்கு புகழ் ஈட்டித்தந்துள்ள விண்ணப்பதாரர் ஒருவரின் உயரமும், மார்பளவும் குறைவாக இருப்பினும் அவர் பிற தேவைகளைப் பூர்த்தி செய்திருப்பின் பொலிஸ் மா அதிபரின் தற்றுணிபின்படி ஆட்சேர்க்கும் பொருட்டான தகைமையை அவர் பெறுவார்.

*** பொலிஸ் கொஸ்தாபல் சாரதி பதவி (அதிரடிப்படை) -**

(i) இலகு வாகனங்களை அல்லது கனரக வாகனங்களை ஓட்டும் திறமை இருப்பதற்கான சான்றிதழ் இருத்தல்.

(ii) மேற்கூறப்பட்ட சான்றிதழைப் பெற்றபின் ஆகக்குறைந்தது 1 வருடத்திற்கு மோட்டார் வாகனம் செலுத்திய அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

**குறிப்பு**.- மோட்டார் வாகன தொழில்நுட்ப அறிவு, மோட்டார் வாகனங்களை திருத்தும் அறிவு, வாகனத்தைச் செலுத்துவதில் நீண்டகால அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை கொடுக்கப்படும்.

(iii) வாகனத்தை திறமையுடன் செலுத்துவதற்கு தேவைப்படும் உடலவயங்களின் இயக்கத்துக்கு தடையாக இருக்கும் ஏதாவதொரு அங்கவீனம் அல்லது பிற உடல் குறைபாடு களையுடைய வேட்பாளர் சேவைக்கு பொருத்தமானவர் என்றும் வைத்திய சான்றிதழ் பெற்றிருப்பினும் தகைமை நீக்கப்படுவார்.

(iii) அடிப்படைத் தகைமைகளைக் கொண்ட விண்ணப்பதாரர் வாகனம் செலுத்துவது, பராமரிப்பு தொடர்பில் பரீட்சிக்கப்படுவர். அது போலவே வீதி விதிகள், போக்குவரத்து சைகைகள் தொடர்பாக வேட்பாளர் பெற்றுள்ள அறிவு, ஒவ்வொரு வேட்பாளரும் வாகனம் செலுத்துவதற்கு திறமை பெற்றுள்ள வாகனங்களும் இயந்திர தொழில்நுட்பம் தொடர்பான அடிப்படை அறிவு ஆகியன வும் பரீட்சிக்கப்படும்.

(iv) *பார்வை தொடர்பான தேவை*.- ஒவ்வொரு கண்ணிலும் பார்வை 6/12 க்கு குறைவாக இருத்தலாகாது. ஒரு கண்ணில் பார்வை 6/6 ஆகவும் மற்றக் கண்ணில் பார்வை 6/18 ஆகவும் இருப்பின் ஏற்றுக் கொள்ளப்படும். நிறப்பார்வை சாதாரணமாக இருத்தல் வேண்டும். விண்ணப்பதாரர் மூக்குக் கண்ணாடி அல்லது பொருத்து வில்லைகள் பாவிப்பவராயின் தகைமையற்றவராவர்.

(ஈ) *பிற தகைமைகள் :*

(i) விண்ணப்பதாரர் திருமணமாகாதவராக இருத்தல் வேண்டும். (விவாகரத்து பெற்றவர்கள், விவாகமானவர்களாகக் கருதப்படுவர்.) ஏற்கனவே பொலிஸ் திணைக்களத்தில் பணிபுரியும் அலுவலர்களுக்கு இந்நிபந்தனை ஏற்புடைய தாகாது.

(iv) இறுதித் தெரிவுச்சபைமுன் தோற்றுவதற்கு முன் விண்ணப்பதாரர் அடிப்படைத் தகைமைகளைப் பரிசோதிக்கும் பரீட்சை, மனோவலிமைப் பரீட்சை, எழுத்துப் பரீட்சை ஆகியவற்றில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். எழுத்துப் பரீட்சை வினாப்பத்திரங்கள் இரண்டினைக் கொண்டிருக்கும் :

* வாக்கியங்கள் அமைத்தல் தொடர்பான பரீட்சை (காலம் : 45 நிமிடம்).

* பொது அறிவு, விவேகம் தொடர்பான பரீட்சை (காலம் : 01 மணித்தியாலம்).

* தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரர் நியமனம் பெறுவதற்கு முன் மருத்துவ பரிசோதனையில் சித்தியடைய வேண்டும். பொலிஸ் சேவைக்கு மருத்துவ ரீதியாக பொருத்தமற்றவராகக் காணப்படும் விண்ணப்பதாரர் நிராகரிக்கப்படுவர்.

* பொலிஸ் கொஸ்தாபல் சாரதி விண்ணப்பதாரர் தொழில் தொடர்பான பரீட்சையில் சித்தியெய்த வேண்டும்.

தொழிற் பரீட்சையின் போது கீழ்க்காணும் விடயங்கள் பரீட்சிக்கப்படும் :-

(அ) வாகனம் செலுத்தும் திறன்
(ஆ) பெருந்தெரு சட்டக் கோவை
(இ) வாகன பராமரிப்பு, சிறு பழுதுபார்த்தல் வேலை தொடர்பான அறிவு

5. **பதவிக்கமர்த்தல் நியதிகள்**.- (i) இப்பதவி நிரந்தரமானது. உதவித் தொகையளிப்பு ஓய்வூதிய நிதியத்திற்கு உரித்துடையவ ராவர் ;

(ii) சேர்க்கப்பட்ட திகதி முதல் மாதாந்த உழைப்பில் 8% த்தை ஓய்வூதிய நிதியத்திற்கு செலுத்த வேண்டும் ;

(iii) அனைத்து உத்தியோகத்தர்களும் பொலிஸ் திணைக்கள நிதியத்துக்கு பங்களிப்பு செய்தல் வேண்டும்.

6. **சேவை நிபந்தனைகள்**.- (அ) நியமனம் மூன்று ஆண்டு காலத்திற்கு தகுதிகாண் அடிப்படையில் இருக்கும்.

(ஆ) தெரிவு செய்யப்படும் விண்ணப்பக்காரர் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையை விளைவுறுத்துமுகமாக ஏற்கனவே ஆக்கப்பட்ட விதிகளுக்கோ அல்லது இனிமேல் ஆக்கப்படக் கூடிய விதிகளுக்கோ அமைந்தொழுக வேண்டும்.

(இ) அவர்கள் தாபன விதிக் கோவையின் I ஆம் II ஆம் தொகுதிகளின் சம்பந்தப்பட்ட ஏற்பாடுகளுக்கும் நிதி ஒழுங்கு விதிகள், திணைக்களக் கட்டளைகள் அத்துடன் பொலிஸ் மா அதிபரினால் அல்லது அரசாங்கத்தினால் காலத்துக்குக் காலம் வெளியிடப்படும் பிற கட்டளைகளுக்கும் உட்பட்டவராவர்.

(ஈ) பதவி உறுதிப்படுத்தப்படுவதற்கு முன்னர் ஒவ்வொரு உத்தியோகத்தரும் விதிக்கப்பட்ட திணைக்களப் பரீட்சையில் சித்தியெய்த வேண்டும். விதிக்கப்படும் பரீட்சையில் சித்தியடையத் தவறுவோர் அல்லது பொலிஸ் கடமைகளை ஆற்றுவதற்குத்

தகுதியற்றவர் எனக்கருதப்படுவோர் பொலிஸ் சேவையிலிருந்து விலக்கப்படுவதற்கு ஆளாவர்.

(உ) அடிப்படைப் பயிற்சிக்காலம் இலங்கைப் பொலிஸ் கல்லூரியில் 1 வருடமும், பிரதேச பயிற்சிக்காலம் 2 வருடங்களாகவும் அமையும்.

(ஊ) தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரர் பதவியில் உறுதிப்படுத்தப்படும்வரை பொலிஸ் மா அதிபரின் விசேட அனுமதியில்லாமல் திருமணம் செய்ய அனுமதிக்கப்பட மாட்டார். எவ்வாறாயினும் 1973, பெப்புருவரி மாதம் 24 ஆந் திகதிய பொலிஸ் வர்த்தமானி பகுதி II இன் 41 ஆம் இலக்க அறிவித்தலின்படி தவிர்க்க முடியாத, மிக முக்கிய காரணங்களின்கீழ் ஆகக்குறைந்தது 2 வருட திருப்திகரமான சேவையின்பின் பொலிஸ் மா அதிபரின் விசேட அனுமதியுடன் திருமணம் செய்வதற்கு அனுமதிக்கப்படலாம்.

(எ) தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பதாரர்கள் பயிற்சிக்குப் பின் 3 வருடகால தகுதிகாண் நிலையில் பொலிஸ் திணைக்களத்திலேயே பணியாற்ற வேண்டியதுடன் இச்சேவைக்காலம் முடிவடைவதற்கு முன்னர் அவர்கள் பதவி விலக விரும்பின் பதவி விலகல் கடிதத்தை சமர்ப்பிக்கும் சந்தர்ப்பத்திலேயே அவருடைய பயிற்சிக்காகவும், சீருடை முதலியவற்றிற்காகவும் செய்த செலவினங்கள் பொருட்டு விதிக்கப்படும் பணத்தொகையை செலுத்துவதற்கு விருப்பம் தெரிவித்து ஒப்பந்தம் ஒன்றில் கையொப்பமிடல் வேண்டும். அப்பணத்தொகை இலங்கை பொலிஸ் கல்லூரியின் பணிப்பாளரினால் கணிக்கப்பட்டு தீர்மானிக்கப்படும். பதவி விலகல்களை அங்கீகரிப்பது 1985 ஆம் ஆண்டின் தாபன விதிக்கோவையின் 1 ஆம் தொகுதியில் 5 ஆம் அத்தியாயத்தின் 4 ஆம் பிரிவிற்கு ஏற்புடையதாய் இருத்தல் வேண்டும்.

(ஏ) தகுதிகூர் நிலை உப பொலிஸ் பரிசோதகர், பயிலுனர் பொலிஸ் கொஸ்தாபல், பொலிஸ் கொஸ்தாபல் சாரதிகள் (விசேட அதிரடிப்படை) பொலிஸ் பயிற்சிக் கல்லூரியில் பயிற்சி ஆரம்பித்தவுடன் பொலிஸ் மா அதிபரின் 1693/2003 ஆம் இலக்க சுற்றறிக்கையின்படி பொலிஸ் நன்னடத்தைக் கோவைக்கு அமைந்தொழுகுவதாக உறுதி/சத்தியம் செய்தல் வேண்டும்.

(ஐ) தகுதிகூர் நிலை உப பொலிஸ் பரிசோதகர், பயிலுனர் பொலிஸ் கொஸ்தாபல், பொலிஸ் கொஸ்தாபல் சாரதிகள் (விசேட அதிரடிப்படை) பொலிஸ் பயிற்சிக் கல்லூரியில் பயிற்சி ஆரம்பித்தவுடன் பொலிஸ் மா அதிபரின் 1804/2004 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் அரச சேவைக்கு அமைந்தொழுகுவதாக உறுதி/சத்தியம் செய்தல் வேண்டும்.

(ஓ) தகுதிகூர் நிலை உப பொலிஸ் பரிசோதகர், பயிலுனர் பொலிஸ் கொஸ்தாபல், பொலிஸ் கொஸ்தாபல் சாரதிகள் (விசேட அதிரடிப்படை) பொலிஸ் திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவி உயர்வு பெறுவதற்கு உரித்துடையவராவர்.

7. (அ) இவ்வர்த்தமானியின் பகுதி I : தொகுதி II (அ) வின் ஆரம்பத்தில் வெளியிடப்பட்டுள்ள அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைய பொது நிபந்தனைகளுக்கு கவனம் ஈர்க்கப்படுகின்றது.

(ஆ) 1990.03.10 ஆந் திகதிய 15/90 ஆம் இலக்க பொது நிருவாக சுற்றறிக்கையின் நியதிகளின்படி ஆட்சேர்ப்பு செய்யப்படும்.

8. விண்ணப்பகாரர் தமது விண்ணப்பத்துடன் கீழ்க்காணும் ஆவணங்களின் பிரதிகளை சமர்ப்பித்தல் வேண்டும் (மூல ஆவணங்களை சமர்ப்பித்தல் ஆகாது) :-

(i) பிறப்புச் சான்றிதழ் ;
(ii) அண்மையில் பெற்ற குணச் சான்றிதழ்கள் இரண்டு (உறவினர்கள் அல்லாதவர்களிடமிருந்து பெறப்பட்டது) ;
(iii) கல்வித் தகைமைகளை சான்றுப்படுத்தும் சான்றிதழ்கள் ;
(iv) விசேட சாதனையுடன் விளையாட்டுத் துறையில் பெற்ற சான்றிதழ்கள் அல்லது பாடத்துக்குப் புறம்பாக பெறப்பட்ட சான்றிதழ்கள் ;
(v) சேவை அனுபவம் தொடர்பான சான்றிதழ்கள் (இருப்பின்) ;
(vi) தேசிய அடையாள அட்டையின் பிரதி.

9. (அ) ஏலவே அரச வேவையிலுள்ள விண்ணப்பதாரர் தமது விண்ணப்பங்களை தத்தமது திணைக்கள தலைவர்களின் ஊடாக அனுப்புதல் வேண்டும். அத்துடன் விண்ணப்பதாரர் தெரிவு செய்யப்படின் அவரை விடுவிக்க முடியும் என்ற சான்றிதழ்களும் இணைக்கப்படல் வேண்டும்.

(ஆ) விண்ணப்பதாரர் 11"x 3" அளவுத் தாளிலான விண்ணப் பத்தை தமது சொந்த கையெழுத்தில் பூரணப்படுத்தி கேட்கப்பட்டுள்ள சான்றிதழ்களின் பிரதிகளுடன் 2 ஆம் பந்தியில் குறிப்பிட்டுள்ள முகவரிக்கு அனுப்ப வேண்டும். எக்காரணம் கொண்டும் திணைக் களத்தின் எந்த உத்தியோகத்தர்களிடமும் விண்ணப்பங்களை நேரடியாக கையளித்தலாகாது.

10. இவ்வறிவித்தலில் விதிக்கப்பட்டுள்ள தேவைகளுக்கு அமைவுறாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படுவதுடன் அது தொடர்பான விண்ணப்பதாரர்களுக்கு அறிவிக்கப்பட மாட்டாது.

**குறிப்பு** :- பரீட்சைக்கும் நேர்முகப் பரீட்சைக்கும் அழைக்கப்படும் விண்ணப்பதாரர்களுக்கு போக்குவரத்து செலவோ பிற செலவுகளோ வழங்கப்பட மாட்டாது.

பொலிஸ் மா அதிபர்.

பொலிஸ் தலைமையகம்,
கொழும்பு 1.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கைப் பொலிஸ் திணைக்களம்**

**உப பொலிஸ் பரிசோதகர்**/ பொலிஸ் கொஸ்தாபல்/பொலிஸ் கொஸ்தாபல் சாரதி (விசேட அதிரடிப்படை) பதவி

1. (அ) முழுப் பெயர் (தெளிவான பெரிய எழுத்துக்களிலும் விண்ணப்பதாரரின் பிறப்புச் சான்றிதழில் உள்ளபடியும் இருத்தல் வேண்டும்) :-----.
(ஆ) பெயர் (முதலெழுத்துக்களுடன்) :-----.
(இ) பால் (ஆண்/பெண்) :-----.
(ஈ) விண்ணப்பதாரரின் தொழில் :-----.
2. தேசிய அடையாள அட்டை இலக்கம் :-----.
3. தந்தையின் முழுப்பெயர் :-----.

4. விண்ணப்பதாரரின் பிறந்த இடம் :-----.
.பிறந்த இடத்திற்குரிய பொலிஸ் நிலையம் :-----.
.மாகாணம் :-----.

5 (அ) தற்போதைய முகவரி :-----.

(ஆ) தற்போதைய முகவரிக்குரிய பொலிஸ் நிலையம் :-----.

(இ) நிரந்தர முகவரி :-----.

(ஈ) நிரந்தர முகவரிக்குரிய பொலிஸ் நிலையமும் தேர்தல் மாவட்டமும் :-----.

6. (அ) தேசிய இனம் :-----.

(ஆ) நீங்கள் பிறப்பினால் இலங்கைப் பிரசையா? அல்லது பதிவு மூலம் இலங்கைப் பிரசையா? பதிவு மூலம் எனின் பதிவுச்சான்றிதழ் பிரதியை இணைக்கவும் :-----.

(இ) வம்சாவழி மூலம் இலங்கை பிரசையானால் பின்வருப வர்களின் பிறந்த இடத்தை குறிப்பிடவும் :-

(1) விண்ணப்பதாரர் :-----.
(2) விண்ணப்பதாரரின் தந்தை :-----.
(3) விண்ணப்பதாரரின் தந்தைவழிப் பாட்டன் :-----.
(4) விண்ணப்பதாரரின் தந்தைவழி முப்பாட்டன் :-----.

7. வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் விண்ணப்பதாரரின் வயது (விண்ணப்பதாரரின் பிறப்புச் சான்றிதழின் பிரதியை இணைக்கவும்) :-

ஆண்டுகள்:-----. மாதங்கள்:-----. நாட்கள்:-----.

8. உயரம் : அடி -----. அங்குலம் -----.

9. கல்வித் தகைமைகள் (சித்தியடைந்த பரீட்சையைக் குறிப்பிட்டு சான்றிதழ்களின் பிரதிகளை இணைக்கவும்) :----.

10. திருமணம் ஆனவரா? /திருமணம் ஆகாதவரா? :-----.

11. (அ) தற்போது செய்யும் தொழில் :-----.
(ஆ) நீங்கள் இலங்கை படைதாங்கு சேவையின் அங்கத்த வரா? :-----.

12. வேறு ஏதேனும் விசேட தகுதிகள்/தகைமைகள் உண்டா? :-----.

13. உங்களைப் பற்றிய தகவல்களைக் கொடுக்கக்கூடிய உறவினரல்லாத) இரு நபர்களின் பெயர்களையும் முகவரிகளையும தருக :-

(அ) -----.
(ஆ) -----.

14. (அ) இலங்கைப் பொலிஸ் சேவையின் ஏதாவது பதவி ஒன்றுக்கு நீங்கள் இதற்கு முன்பு விண்ணப்பித்த துண்டா:----.

அவ்வாறாயின் அது தொடர்பான விபரங்களைத் தருக:-----.

(ஆ) இதற்கு முன்பு நீங்கள் பொலிஸில் அல்லது இலங்கை உப பொலிசில் சேவை செய்துள்ளீரா ? :-----.

அவ்வாறாயின் அப்பதவியில் இருந்து விலகியதற்கான காரணங்களைத் தருக ? :-----.

(அ) தற்போது படைதாங்கு சேவையில் இருக்கிறீரா? :-----.

15. (தற்போது படைதாங்கு சேவையில் இருந்தால் அப்படை தாங்கு சேவையின் தலைவர் ஊடாக விண்ணப் பத்தை அனுப்ப வேண்டும்).

(ஆ) படைதாங்கு சேவையில் இருந்துள்ளீரா? :-----.

(படைதாங்கு சேவையில் இருந்திருந்தால் அதிலிருந்து விலகியபோது கொடுக்கப்பட்ட சான்றிதழின் பிரதியை இணைக்கவும் ) :-----.

16. படைதாங்கு சேவையின் தொண்டர் அணியில் இருக்கின் றீரா?:-----. அவ்வாறு இருந்தால் படைதாங்கு சேவையின் தலைவர் ஊடாக விண்ணபத்தை அனுப்புதல் வேண் டும்) :-----.

17. படைதாங்கு சேவையில் தொண்டர் அணியில் இருந்துள் ளீரா?:-----. (படைதாங்கு சேவையில் தொண்டர் அணியில் இருந்திருந்தால் அதிலிருந்து விலகியபோது கொடுக்கப்பட்ட சான்றிதழ்களை இணைக்கவும்)

18. நீங்கள் ஏதாவது குற்றம் தொடர்பாக அல்லது சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டீரா ? அல்லது வேறு குற்றம் தொடர்பாக குற்றம்சாட்டப்பட்டு நீதிமன்றத்திற்கு அழைக்கப் பட்டோ அல்லது தண்டனை கொடுக்கப்பட்டுள்ளீரா ? (அவ்வா றாயின் விபரங்களைத் தருக) :-----.

19. நீங்கள் அல்லது உங்கள் உறவினர் எவரேனும் தவறில் சம்பந்தப்பட்டு அல்லது அது தொடர்பான அழைப்பாணை கொடுக்கப்பட்டு அல்லது குற்றம் சுமத்தப்பட்டு அல்லது குற்றத்திற்கு தண்டனை வழங்கப்பட்டுள்ளீரா? (அவ்வாறாயின் விபரம் தருக) :-----.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் என்னுடைய அறிவுக்கு எட்டியவரையில் உண்மையானவை என்றும் சரியானவை என்றும் வெளிப்படுத்துகின்றேன். மேலே தரப்பட்டுள்ள விபரங்கள் எவையேனும் பிழையானவையென்றோ பொய்யானவையென்றோ தெரியவரின் நான் பொலிஸ் திணைக்கள சேவையில் சேர்த்துக் கொள்ளப்பட்டிருப்பினும் எந்த சந்தர்ப்பத்திலும் உடனடியாக நீக்கப்படுவேன் என்பதையும் நான் அறிவேன்.

-----.
விண்ப்பதாரரின் கையொப்பம்.

திகதி :-----.

10-606

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பற்றிய அமைச்சு

தேசிய மாணவ வீரர் படையணி

### உள்ளூர் சபைகளின் கீழுள்ள கிராமப் பாடசாலைகளில் ஆங்கில ஆசிரியர்களாக நியமிப்பதற்கும் தேசிய மாணவ வீரர் படையணியின் கீழ் பயிலுனர் உத்தியோகத்தர்களாக அதிகாரவாணைக்கு நியமிப்பதற்கும் தகுதியுடையோரைத் தேர்ந்தெடுக்கும் போட்டிப் பரீட்சை - 2006

பின்வரும் கல்வியும் ஏனைய தகுதியுடைய நபர்களிடமிருந்து உள்ளூராட்சி சபைகளின் கீழுள்ள கிராமப் பாடசாலைகளுக்கு ஆங்கில ஆசிரியர்களாக நியமிப்பதற்கும் தேசிய மாணவ வீரர் படையணியின் கீழ் பயிலுனர் உத்தியோகத்தர்களாக அதிகார மளிப்பதற்கும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. **தகைமைகள்**.- விண்ணப்பதாரர்கள்-

2.1 இலங்கையின் பிரஜையாதல் வேண்டும்.

2.2 கடைசி 5 வருட காலத்தினுள் கீழ் காணப்படும் உள்ளூர் சபை அதிகாரப் பிரதேசங்களில் நிரந்தர வதிவாளராதல் வேண்டும். வடக்கு, கிழக்கு, ஊவா, வடமத்திய, மத்திய, வடமேல்

2.3 நல்லொழுக்கமும், நல்ல உடல், மனநிலை கொண்டவர்களாக இருத்தல் வேண்டும்.

2.4 2006.12.31 ஆந் திகதிக்கு வயது 25 க்கு குறைதல் வேண்டும்.

2.5 உயரம் :
ஆண் விண்ணப்பதாரர்கள் 5 அடி 5 அங்குலத்திற்கு குறையாதிருத்தல் வேண்டும் ;
பெண் விண்ணப்பதாரர்கள் 5 அடி 2 அங்குலத்திற்கு குறையாதிருத்தல் வேண்டும்.

2.6 விவாகமாகாதவர்களாக இருத்தல் வேண்டும்.

2.7 பாடத்திட்டத்தின் உடற்பயிற்சி நிகழ்ச்சி திட்டத்தில் பங்குபற்றுவதற்கு போதிய உடற் தகைமைகளையும் கொண்டிருத்தல் வேண்டும்.

3. **கல்வியும் ஏனைய தகைமைகளும் :**

3.1 க. பொ. த (உ.த.) பரீட்சையில் 3 பாடங்களில் ஒரே தடவையில் சித்தியெய்திருத்தல் வேண்டும்.

3.2 க. பொ. த. (சா.த.) பரீட்சையில் முதல்மொழி, கணிதமும் உட்பட 6 பாடங்களில் குறைந்தபட்சம் இரண்டு தடவைகளி லாவது சித்தியடைந்திருத்தல் வேண்டும். ஏதேனும் 3 பாடங்களில் திறமைச் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

3.3 2003 ஆம் ஆண்டிலோ அல்லது அதன் பின்னரோ க. பொ. த (சா.த.) பரீட்சையில் தோற்றும் விண்ணப்பதாரர்கள் ஆங்கில பாடத்திற்காக உயர் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். 2003 ஆம் ஆண்டிற்கு முன்னர் க. பொ. த. (சா.த.) பரீட்சையில் தோன்றிய விண்ணப்பதாரர்கள் ஆங்கில பாடத்திற்காக திறமைச் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

3.4 பாடசாலையில் விளையாட்டுப் பணிகள் அல்லது மாணவ வீரர் சாரணர் இயக்கம், இசை வாத்தியக் குழுக்களில் அங்கத்துவம் உட்பட வெளிச் செயற்பாடுகளில் ஈடுபட்டிருந்த விண்ணப்பதாரர்களுக்கு நேர்முகப் பரீட்சையில் முக்கியத்துவம் பெற்றுக் கொடுக்கப்படும்.

4. **தேர்ந்தெடுக்கும் முறை :**

4.1 சகல விண்ணப்பதாரர்களும் பரீட்சைத் திணைக்களத்தி னால் நடாத்தப்படும் ஆங்கில பாஷை பற்றிய எழுத்துமூல பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும்.

4.2 எழுத்துமூல பரீட்சை விண்ணப்பதாரர்களின் ஆங்கில மொழி அறிவை அறவிடுவதற்காக நடாத்தப்படும் வினாப்பத்திரங்கள் இரண்டைக் கொண்டுள்ளது :

*ஆங்கிலம் I ஆம் பாகம்* - ஆங்கில மொழி பற்றிய கேள்விகள் அடங்கிய ஒரு மணித்தியால கேள்வித்தாள் (40 புள்ளிகள்)
*ஆங்கிலம் II ஆம் பாகம்* - அமைப்புப் பற்றிய கேள்விகள் அடங்கிய 2 மணித்தியால வினாத்தாள் (60 புள்ளிகள்)

4.3 பரீட்சையில் உயர் திறமையைக் காட்டும் தேர்வுதாரர்கள் வைத்திய பரிசோதனைக்கும் உடற் தகைமை பற்றிய பரிசோதனைக்கும் உட்படுத்தப்படுவதோடு, வைத்திய பரிசோதனை, உடற் தகைமை பரிசோதனையில் சித்தியடை யாத விண்ணப்பதாரர்களைச் சேர்த்துக்கொள்வதற்காக கவனித்துப் பார்க்கப்படமாட்டாது.

4.4 பரீட்சையில் உயர் பெறுபேறுகளைப் பெறும் விண்ணப்ப தாரர்களில் வைத்திய பரிசோதனையிலும், உடற் தகைமைச் சோதனையிலும் சித்தி பெறுபவர்கள் நேர்முகப் பரீட் சைக்கு உள்ளாக்கப்படுவார்கள். எவ்வாறாயினும் எழுத்துப் பரிசோதனையில் 40% யையும் விட குறைந்த புள்ளிகள் பெற்றுக்கொண்ட விண்ணப்பதாரர்கள் நேர்முகப் பரீட்சைக்காக அழைக்கப்படமாட்டார்கள். போதியளவு தகைமைகளைப் பூர்த்தி செய்த விண்ணப்பதாரர்கள் எண்ணிக்கைகள் இருப்பின் ஒவ்வொரு பகுதியிலுள்ள வெற்றிட எண்ணிக்கையைப் போன்று ஐந்து மடங்கு அளவு விண்ணப்பதாரர்கள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவார்கள். சேர்த்துக்கொள்கையில் புள்ளிகள் பெற்றுக் கொடுக்கும் செயல்முறை கீழ்க்காணும் விதத்தி லாகும் :-

எழுத்துப் பரீட்சை - 60 புள்ளிகள்
நேர்முகப் பரீட்சை - 40 புள்ளிகள்

5. **சேர்த்துக்கொள்ளல் :**

5.1 மேற் கூறப்பட்ட தகைமைகளின் பிரகாரம் தேர்ந்தெடுக்கப் படும் விண்ணப்பதாரர்கள் தொடர்புபட்ட உள்ளூராட்சி சபைகளின் கீழ் இலங்கை ஆசிரியர் சேவையின் III ஆம் வகுப்பின் II ஆந் தரத்திற்காகச் சேர்த்துக்கொள்ளப் படுவார்கள். 2006.04.25 ஆந் திகதிய அரச நிர்வாக சுற்றறிக்கை 06/2006 இன் பிரகாரம் சம்பளப் பரிமாணம் கீழ் காணப்படும் விதத்திலாகும் :-

ரூபா 12,920 - 10 x 120 - 5 x 150 - ரூபா 14,870

5.2 சேர்த்துக்கொள்ளப்படும் விண்ணப்பதாரர்கள் தேசிய மாணவ வீரர் படையணியின் பயிற்சி மத்திய நிலையங்களில் ஒரு வருட பயிற்சியினை பெற்றுக்கொள்ள வேண்டும். பயிற்சி பாடத்திட்டம் ஆங்கில மொழி, உடற்பயிற்சி என்னும் பிரிவுகளைக் கொண்டுள்ளது. பயிற்சியினை சிறப்பாக முடிவுறுத்தும் விண்ணப்பதாரர்கள் தொடர்புடைய உள்ளூராட்சி சபை அதிகாரப் பிரதேசங்களின் கீழ் கிராமப் பாடசாலைகளில் ஆங்கில ஆசிரியர்களாக நியமிக்கப்பட்டு அனுப்பப்படுவார்கள். அவர்கள் நியமிக்கப்படும் கல்வி வலயத்தினுள் குறைந்த பட்சம் 10 வருடங்களாயினும் கட்டாயமாக சேவையாற்றுதல் வேண்டும். மேலும் சிறப்பாக பயிற்சியை முடிவுறுத்தும் விண்ணப்பதாரர்கள் தேசிய மாணவ வீரர் படையணியின் கீழ் பயிலுனர் உத்தியோகத்தர்களாக அதிகாரத்துக்குட்படுத்தப்பட்டும் ஆங்கில ஆசிரியர்களாக சேவையாற்றுவதற்கு மேலதிகமாக நியமிக்கப்படும் பாடசாலைகளில் மாணவ வீரர் குழுக்கள் பொறுப்பான ஆசிரியர்களாகவும் அவர்கள் சேவையாற்றுதல் வேண்டும்.

6. **பரீட்சை நடாத்தும் முறை :**

6.1 பரீட்சைக் கட்டணம் 250 ரூபாவாகும். தொடர்புடைய காசு நாட்டின் எந்தவொரு தபால் அலுவலகத்திற்கு தலைப்பு 4000-20-03-20-13 க்கு கழியுமாறு கொடுத்துப் பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டினை விண்ணபத்துடன் ஒட்டுதல் வேண்டும். விண்ணப்பதாரர்கள் பற்றுச் சீட்டின் பிரதியொன்றை தம்மிடம் வைத்துக்கொள்தல் உபயோகமாக இருக்கலாம். விண்ணப்பங்கள் 2006.11.22 ஆந் திகதிக்கு முன்னர் பதிவுத் தபாலில் மாத்திரம், "பரீட்சை ஆணையாளர் நாயகம், பரீட்சைத் திணைக்களம், அமைப்பு, வெளிநாட்டு பரீட்சைக் கிளை, பலவத்தை, பத்தரமுல்ல" எனும் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். விண்ணப்பங்கள் இவ்வறிவித்தலின் முடிவிலுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்தின்படி தயாரித்தல் வேண்டும். ஒவ்வொரு விண்ணப்பமும் A-4 அளவிலான தாளில் தயாரித்தல் வேண்டும். விண்ணப்பப்பத்திரத்தில் இலக்கம் 1 இலிருந்து 8 வரையிலான தலைப்புக்கள் பத்திரத்தின் முதல் பக்கத்திலும் மற்றத் தலைப்புக்கள் அடுத்த பக்கத்திலும் வரும் விதம் தயாரித்தல் வேண்டும்.

6.2 பரீட்சை கீழ்க்காணப்படும் மாவட்டங்களில் அமைந்துள்ள பரீட்சை மத்திய நிலையங்களில் நடாத்தப்படும்.

| நகரம்/மாவட்டம் | இலக்கம் |
|---|---|
| மாத்தளை | 4 |
| கண்டி | 5 |
| நுவரெலியா | 6 |
| யாழ்ப்பாணம் | 10 |
| மன்னார் | 11 |
| முல்லைத்தீவு | 12 |
| அனுராதபுரம் | 19 |
| பொலொன்னறுவை | 20 |
| பதுளை | 21 |
| மொனராகலை | 22 |
| கிளிநொச்சி | 25 |
| வவுனியா | 13 |
| திருகோணமலை | 14 |
| மட்டக்களப்பு | 15 |
| அம்பாறை | 16 |
| புத்தளம் | 17 |
| குருநாகல் | 18 |

6.3 சகல விண்ணப்பதாரர்களுக்கும் வரத்தமானியில் பிரசுரிக் கப்பட்ட பரீட்சை சட்ட திட்டங்களைப் பற்றிய புரிந்துணர்வு இருக்க வேண்டியதுடன், அதன் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

6.4 பூர்த்தி செய்யப்படாத அல்லது மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கேற்ப தயாரிக்கப்படாத விண்ணப்பப்படிவங்கள் அறிவிப்பின்றி நிராகரிக்கப்படும.

பணிப்பாளர்.

தேசிய படை வீரர் படையணி,
இலக்கம் 15,
துட்டுகெமுனு வீதி,
பாமன்கடை,
தெஹிவளை.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**உள்ளூர் சபைகளின் கீழுள்ள கிராமப் பாடசாலைகளில் ஆங்கில ஆசிரியர்களாக நியமனஞ் செய்வதற்கும் தகுதியுடையோரைத் தேர்ந்தெடுத்துக்கொள்ளும் தேசிய மாணவ வீரர் படையணியின் கீழ் அதிகாரவாணைக்கு நியமனஞ் செய்வதற்காக நடாத்தப்படும் போட்டிப் பரீட்சை - 2006**

COMPETITIVE EXAMINATION TO RECRUIT ENGLISH TEACHERS TO SERVE IN REMOTE SCHOOLS COMING UNDER THE PUVIEW OF PROVINCIAL COUNCILS AND TO BE COMMISSIONED UNDER THE NATIONAL CADET CORPS AS PROBATIONARY OFFICERS - 2006

*விண்ணப்பத்தைத் தயாரிக்கையில் கீழ்க்காணப்படும் இலக்கம் 1 லிருந்து 8 வரையிலான தலைப்புக்கள் A 4 அளவிலான தாளில் முதல் பக்கத்திலும், ஏனைய தலைப்புக்கள் அடுத்த பக்கத்திலும் இருக்குமாறு தயாரிக்கவும் மேல் குறிப்பிடப்படும் விதம் பரீட்சையில் பெயர் சிங்களம்/ தமிழ் மொழிகளுக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும் குறிப்பிடுதல் அத்தியாவசியமாகும்.*

(அலுவலக உபயோகத்திற்காக)

1. முதலெழுத்துகளை பின்னால் குறிப்பீட்டு- முதலெழுத்துக் களுடன் பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :-----.
உதாரணம் : சில்வா ஏ. பீ.

முதலெழுத்துக்களால் குறிக்கப்படும் பெயர்கள் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :-----.

2. சொந்த முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :-----. (நுழைவுச்சீட்டு இம்முகவரிக்கு அனுப்பப்படும்)

3. தேசிய அடையாள அட்டை இலக்கம் :-

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

4. பால் (பெண்/ஆண்) :- பெண் -1, ஆண் - 0

தொடர்புபட்ட இலக்கத்தை சதுரத்தினுள் எழுதவும்

5. பரீட்சையில் தோற்றும் நகரமும் நகர இலக்கமும் :-----.

| நகரம் | நகர இலக்கம் |
|---|---|
| | |

(அறிவித்தலில் 6.2 ஆம் பந்திக்கேற்ப தொடர்புபட்ட இலக்கத்தை சதுரத்தினுள் எழுதவும்)

6. இன வகை :-

(சிங்களம் - 1, இலங்கைத் தமிழ் - 2, இந்தியத் தமிழ் - 3, முஸ்லிம் - 4, மலே - 5, ஏனைய - 6

(தொடர்புபட்ட இலக்கத்தை சதுரத்தில் எழுதவும்)

7. பிறந்த திகதி :-

ஆண்டு மாதம் திகதி

2006.12.31 ஆந் திகதிக்கு வயது :-

வருடங்கள் மாதங்கள் நாட்கள்

8. வதியும் மாவட்டம் :-----

| மாவட்டம் | மாவட்ட இலக்கம் |
|---|---|
| | |

(அறிவித்தல் 6.2 ஆம்பந்திக்கு ஏற்ப தொடர்புபட்ட இலக்கத்தை சதுரத்தினுள் எழுதவும்)

9. கல்வித் தராதரங்கள் :
க. பொ. த. (சா.த.) பரீட்சை (சித்தியெய்திய விடயமும் பெற்றுக்கொண்ட தரங்களும்) :

| பாடங்கள் | தரம் |
|---|---|
| ................................... | ................................... |
| ................................... | ................................... |
| ................................... | ................................... |
| ................................... | ................................... |
| ................................... | ................................... |

க. பொ. த. (உ.த.) பரீட்சை (சித்தியெய்திய பாடமும் பெற்றுக் கொண்ட தரங்களும்).

| .பாடங்கள் | தரம் |
|---|---|
| ................................... | ................................... |
| .. ................................... | ................................... |
| ................................... | ................................... |
| ................................... | ................................... |
| .. ................................... | ................................... |

10.ஏனைய தகைமைகள் :-----.

11. விளையாட்டுக்கள், விடயமொத்த செயற்பாடுகள் :-----.

மேற்குறிப்பிட்ட விபரங்கள் உண்மையானவையெனவும் பிழை யற்றவையெனவும் உறுதிப்படுத்துவதோடு, என்னைப் பற்றி விபரம் தரக்கூடிய உறவினரல்லாத இருவர்களின் பெயர்களும் முகவரிகளும் கீழ் காணப்படுகின்றன :-

| | |
|---|---|
| பெயர் :-----. | பெயர் :-----. |
| பதவி :-----. | பதவி :-----. |
| சேவை இடம் :-----. | சேவை இடம் :-----. |
| தொலைபேசி இலக்கம் :-----. | தொலைபேசி இலக்கம் :-----. |

12. இவ் விண்ணப்பப்படிவத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள விபரங்கள் உண்யையானவையெனவும், பிழையற்றவை யெனவும், அவ் விபரங்கள் எதுவும் பொய்யானவை அல்லது பிழையானவையென நான் தேர்ந்தெடுக்க முன்னர் அறிந்து கொண்டால் நான் தகுதியற்றவரொருவராவேன் எனவும், நியமனத்தின் பின்னர் அதனை அறிந்து கொண்டால் நான் எதுவித நஷ்டஈடுமின்றி சேவையிலிருந்து அகற்றுவதற்கு உட்படுவேனெனவும் நான் அறிவேன்.

பரீட்சைக் கட்டணமாக ரூபா 250 ........................... தபால் அலுவலகத்திற்குக் கொடுத்துப் பெற்றுக் கொண்ட .............................. இலக்கமுடைய பற்றுச்சீட்டு இங்கு தொடர்புபட்ட இடத்தில் ஒட்டப்பட்டுள்ளது.

-----
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :-----

பணம் கொடுத்து பெற்றுக்கொண்ட பற்றுச் சீட்டினை இங்கு ஒட்டவும்.

13. **விண்ணப்பதாரரின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல் :**

இவ்விண்ணப்பத்தை சமர்ப்பிக்கும் திரு./செல்வி .................... .......................... நான் சொந்தமாகவே அறிந்த ஒருவரெனவும், அவர் இன்று என் முன்னிலையில் அவருடைய கையொப்பத்தை இட்டாரெனவும் உறுதிப்படுத்துகிறேன்.

-----
உறுதிபடுத்துபவரின் கையொப்பம்.
(பதவி முத்திரையுடன்)

கையொப்பத்தை உறுதிபடுத்தும்-

உத்தியோகத்தரின் முழுப்பெயர் :-----.
பதவி :-----.
முகவரி :-----.
திகதி :-----.

*கையொப்பத்தை உறுதிபடுத்தல் :*

(இவ்விண்ணப்பதாரரின் கையொப்பத்தை உறுதீபடுத்து தலானது, அரச பாடசாலையொன்றின் அதிபர், சமாதான நீதிவா னொருவர், முப்படையின் அதிகாரம்பெற்ற உத்தியோகத்தரொருவர், பொலிஸ் சேவையில் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட பதவியொன்றை ஏற்றுள்ள உத்தியோகத்தரொருவர் அல்லது அரச சேவையின் நிரந்தர உயர் பதவியொன்றை ஏற்றுள்ள உத்தியோகத்த ரொருவரால் செய்தல் வேண்டும்).

10-511

**கல்வி அமைச்சு**

இலங்கை உயர் தொழில்நுட்ப கல்வி நிறுவனம் (SLIATE)

**"தொழில்நுட்ப கல்வியில் அதிசிறந்த திறமைகாண் நிறுவனம்"**

**உயர் தொழில்நுட்பவியல் நிறுவனங்களுக்கு மாணவர்களை அனுமதித்தல் - கல்வி ஆண்டு 2006**

இலங்கை உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவனத்தினால் (இ. உ. தொ. க. நி.) நடாத்தப்படும் உயர் தேசிய டிப்ளோமா மற்றும் தேசிய டிப்ளோமா கற்கைநெறிகளுக்கு, 2005 ஆம் ஆண்டு அல்லது அதற்கு முதல் க. பொ. த. (உ. த) பரீட்சையில் சித்தியடைந்த தேவையான தகைமைகளைப் பூர்த்திசெய்த மாணவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**விண்ணப்பங்களைப் பெற்றுக்கொள்ளும் முறை.**- சகல விண்ணப்பங்களும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு ஏற்ப தயாரிக்கப்படல் வேண்டும். இலங்கை உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவனக் கணக்கு இல. 0025-100133397613 இற்கு பார்க் வீதியில் உள்ள மக்கள் வங்கியில் ரூபா 250.00 ஐ வைப்பிலிட்டு அதற்கான பற்றுச்சீட்டினையும் விண்ணப்பத்துடன் இணைத்து சுய முகவரியிடப்பட்ட கடிதவுறையுடன் இலங்கை உயர் தொழில்நுட்ப நிறுவனத்திற்கு அல்லது குறித்த நிறுவனத்தின் முகவரிக்கு அனுப்பிவைக்கப்படல் வேண்டும். கடிதத்தின் இடதுபக்க மேல் மூலையில் பயில விரும்பும் பாடநெறி தெளிவாகக் குறிப்பிடப்படல் வேண்டும்.

ஒன்றுக்கு மேற்பட்ட நிறுவகங்களுக்கு விண்ணப்பிக்க விரும்பும் விண்ணப்பதாரிகள் தனித்தனியான கட்டணங்களுடன் தனித்தனியான விண்ணப்பங்களை அந்தந்த நிறுவனங்களுக்கு அனுப்பிவைக்க வேண்டும். மேலே குறிப்பிட்டுள்ள தேவைப்பாடுகளைப் பூர்த்திசெய்யாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

முடிவுத் திகதிக்குப் பின் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

"அ" பிரிவில் இலங்கை உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவனத்திற்குச் சொந்தமான உயர் தொழிலில்நுட்ப நிறுவனங்களினதும்/ நிறுவனப் பிரிவுகளினதும் முகவரிகளும் நடாத்தப்படும் பாடநெறிகள் தொடர்பான விபரங்களும் குறிப்பிடப்பட்டிருப்பதுடன் விண்ணப்பதாரிகள் "ஆ" பிரிவில் குறிப்பிடப்படும் பாடநெறிகளை பிரிவு மட்டுமே தெரிவுசெய்ய வேண்டும்.

விண்ணப்பங்கள் "பணிப்பாளர் நாயகம், இலங்கை உயர் தொழில்நுட்ப கல்வி நிறுவனம், இல. 18/2, வார்ட் இடம், கொழும்பு 7" எனும் முகவரிக்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.

**விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் முடிவுத் திகதி** : 2006, நவெம்பர் 20.

**விரிவுரைகள் இடம்பெறும் முறைமை :**

*காலை/முழுநேரக் கற்கைநெறி :* கிழமை நாட்களில் காலை நேரங்களில்

*பகுதிநேரக் கற்கைநெறி :* வார இறுதி நாட்களில் ; காலை நேரங்களில்.

(பகுதிநேரக் கற்கைநெறிகள் உரிய துறையில் தொழில் புரிவோருக்கு மட்டும் என மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.)

**கற்கைநெறிகளுக்கான கட்டணங்கள்.**- காலை நேரக் கற்கைநெறிகளுக்கு கட்டணம் அறவிடப்படமாட்டாது. பகுதிநேர மாணவர்களிடமிருந்த ஒவ்வொரு தவணைக்கும் ரூபா 1,000.00 அறவிடப்படும். (வருடத்திற்கு இரண்டு தவணைகள்) இக்கட்டணங்கள் வருடாந்த திருத்தத்திற்கு உட்பட்டது.

**நேர்முகப் பரீட்சை.**- தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பங்களின் அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்டோர் தேர்வுப் பரீட்சை அத்துடன் அல்லது நேர்முகப் பரீட்சைக்கு ஒன்றுக்குத் தோற்றுதல் வேண்டும். க. பொ. த. (உ.த.) பரீட்சையில் பெற்றுக்கொள்ளப்பட்ட இஸற் ஸ்கோர் அல்லது புள்ளிகளின் அடிப்படையிலேயே மாணவர்கள் தெரிவுசெய்யப்படுவர். இது தொடர்பான திகதி, நேரம், இடம், சமர்ப்பிக்கப்படவேண்டிய ஆவணங்கள் போன்ற விபரங்கள் கடிதமூலம் அறிவிக்கப்படும். மூலப்பிரதி இல்லாத பட்சத்தில் மூலப்பிரதிகள் மாணவர்கள் பதவின்போது சமர்ப்பிக்கப்படும் என்ற அடிப்படையில் அதன் பிரதிகள் ஏற்றுக்கொள்ளப்படும்.

**தங்குமிட வசதிகள்.**- பின்வரும் நிறுவனங்களில் தகுதிவாய்ந்த முழுநேர மாணவர்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட தங்குமிட வசதிகள் உள்ளன. மாணவர்களுக்கான விடுதி வசதிகள் தேர்வு நிறுவனத்திற்கும் அவரின் வீட்டுக்கும் இடைப்பட்ட தூரத்தை முதன்மைஅடிப்படையாக்க கொண்டே இருக்கும்.

அம்பாறை ஹாடி நிறுவனம் ஆண், பெண் தங்குமிட வசதி.

நெய்வலை, தெகிவளை நிறுவனங்கள் பெண்கள் தங்குமிட வசதி மட்டும்.

*பிரிவு "அ"*

**உயர் தொழில்நுட்ப நிறுவனங்களின் உயர்தொழில் நுட்ப பகுதிகளின் குறியீட்டு இல., தொலைபேசி இல. மற்றும் முகவரி கீழே தரப்பட்டுள்ளன :**

| *நிறுவக இல.* | *நிறுவகத்தின் பெயர்* | *முகவரி* | *தொலைபேசி இல.* |
|---|---|---|---|
| 01. | உயர்தொழில்நுட்ப நிறுவனம், தெஹிவளை | வைத்தியா வீதி, தெஹிவளை | 011-2738349 |
| 02. | உயர்தொழில்நுட்ப நிறுவனம், காலி | களுவெல்ல, காலி | 091-2223774 |
| 03. | உயர்தொழில்நுட்ப நிறுவனம், கண்டி | இல. 16, கெப்பெட்டிபொல வீதி, கண்டி | 081-2226644 |
| 04. | உயர்தொழில்நுட்ப நிறுவனம், குருநாகல் | இல. 22/1, வில்கொடை வீதி, குருநாகல் | 037-2224911 |
| 05. | உயர்தொழில்நுட்ப நிறுவனம், பதுளை | கிறீன்பேண்ட் ஒழுங்கை, பதுளை | 055-2230218 |
| 06. | உயர்தொழில்நுட்ப நிறுவனம், யாழ்ப்பாணம் | இல. 78, பலாலி வீதி, யாழ்ப்பாணம் | 021-2222595 |
| 07. | உயர்தொழில்நுட்ப நிறுவனம், நெய்வலை | நெய்வலை, எஸ்ஸல்ல, வியாங்கொடை | 033-2292544 |
| 08. | ஹார்டி உயர் தொழில்நுட்ப நிறுவனம், அம்பாறை | இங்கினியாகல வீதி, அம்பாறை | 063-2222056 |
| 09. | உயர்தொழில்நுட்ப நிறுவனம், திருகோணமலை. | தொழில்நுட்ப பயிற்சி வளாகம், உப்புவெளி, திருகோணமலை | 026-2223232 |
| 10. | உயர்தொழில்நுட்ப நிறுவனம், லபுதுவ | சிறிதம்ம மாவத்தை, லபுதுவ, அக்மீமன | 091-2246180 |
| 11. | உயர்தொழில்நுட்ப நிறுவனப் பகுதி, அநுராதபுரம் | தொழில்நுட்பக் கல்லூரி, அநுராதபுரம் | 025-2234417 |
| 12. | உயர்தொழில்நுட்ப நிறுவனப் பகுதி, வறக்காப்பொலை, | தொழில்நுட்பக் கல்லூரி, வறக்காப்பொலை | 035-2267651 |
| 13. | உயர்தொழில்நுட்ப நிறுவனப் பகுதி, இரத்தினபுரி | தொழில்நுட்பக் கல்லூரி, இரத்தினபுரி | 045-2232390 |
| 14. | உயர்தொழில்நுட்ப நிறுவனப் பகுதி, களுத்துறை | தொழில்நுட்பக் கல்லூரி, களுத்துறை | 034-2222325 |
| 15. | உயர்தொழில்நுட்ப நிறுவனப் பகுதி, பெலிஅத்தை | தொழில்நுட்பக் கல்லூரி, பெலிஅத்த | 047-2243229 |
| 16. | உயர்தொழில்நுட்ப நிறுவனப் பகுதி, சம்மாந்துறை | தொழில்நுட்பக் கல்லூரி, சம்மாந்துறை | 067-2261304 |
| 17. | உயர்தொழில்நுட்ப நிறுவனப் பகுதி, மட்டக்களப்பு | தொழில்நுட்பக் கல்லூரி, மட்டக்களப்பு | 065-2247877 |

**பாடநெறிகளின் பெயர் மற்றும் நிறுவகங்களின் இலக்கங்கள் :**

| *பாடநெறிகளின் பெயர்* | *கால எல்லை* | *பாடநெறிகள் நடாத்தப்படும் நிறுவகங்களின் இலக்கங்கள்* |
|---|---|---|
| 1. உயர் தேசிய கணக்கியல் டிப்ளோமா - (உ.தே.க.டி) - காலை முழு நேரம் | 4 வருடங்கள் | 1, 2, 3, 4, 5, 6, 9, 11, 12, 16, 17 |
| 1.1. உயர் தேசிய கணக்கியல் டிப்ளோமா - (உ.தே.க) - பகுதி நேரம் | 4 வருடங்கள் | 1, 2, 3, 4, 5, 6, 9, 11, 12, 13, 14, 15, 16, 17 |
| 2. உயர் தேசிய முகாமைத்துவ டிப்ளோமா - (உ.தே.மு.டி) - காலை முழு நேரம் (ஆங்கில மொழிமூலம்) | 4 வருடங்கள் | 1, 2, 3, 5, 6 |
| 3. உயர்தேசிய தகவல் தொழில்நுட்பவியல் டிப்ளோமா - (உ.தே.த.தொ.டி) - காலை முழு நேரம் (ஆங்கில மொழி மூலம்) | 2 1/2 வருடங்கள் | 3, 4, 5, 6, 7, 8, 10 |

| | | |
|---|---|---|
| 4. உயர் தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா – விவசாயம் (தே.தொ.டி) – காலை முழு நேரம் (ஆங்கில மொழி மூலம்) | 3 வருடங்கள் | 7, 8, 10 |
| 5. உயர் தேசிய ஆங்கில டிப்ளோமா – (தே.ஆ.டி) – ஆங்கிலம்) – காலை முழு நேரம் | 2 வருடங்கள் | 1, 2, 3, 4, 5, 6, 8 |
| 5.1. உயர் தேசிய ஆங்கில டிப்ளோமா – (தே. ஆ. டி) – பகுதி நேரம் | 2 வருடங்கள் | 1, 2, 3, 4, 5, 6, 9, 11, 12, 14, 15, 16, 17 |
| 6. உயர் தேசிய வியாபாரக் கல்வி டிப்ளோமா – (தே.வி.க.டி) – காலை முழு நேரம் | 3 வருடங்கள் | 1, 2, 3, 5, 6 |
| 7. உயர் தேசிய வியாபார நிதி டிப்ளோமா – (தே.வி.நி.டி)– காலை முழு நேரம் (ஆங்கில மொழிமூலம்) | 2 வருடங்கள் | 1 |

***குறிப்பு :***

(1) சகல பாடநெறிகளின் பாடத்திட்டங்கள் மீளாய்வு செய்யப்படும். மீளாய்வு செய்யப்பட்ட சில பாடநெறிகள் 2006 ஆம் ஆண்டில் நடைமுறைக்குக் கொண்டுவரப்படும். அத்துடன் இப்பாடநெறிகளின் காலம் மாறலாம்.

(2) முதலாம் மற்றும் இரண்டாம் ஆண்டில் உயர் தேசிய கணக்கியல் டிப்ளோமா (காலை/முழுநேரம்) வின் மொழிமூலமானது வார நாட்களில் சிங்களம் அல்லது தமிழில் நடாத்தப்படும். மூன்றாம் மற்றும் நான்காம் வருடங்களில் ஆங்கில மொழி மூலமும் மற்றும் அவை வார இறுதி நாட்களில் நடைபெறும்.

(3) உயர் தேசிய முகாமைத்துவ டிப்ளோமா (காலை/முழுநேரம்) பாடநெறியின் முதலாம் மற்றும் 2 ஆம் ஆண்டு வார நாட்களில் காலை வேளையில் நடாத்தப்படும். மேலும் 3 ஆம் மற்றும் இறுதி ஆண்டானது வார இறுதி நாட்களில் நடைபெறும்.

(4) க. பொ. த. (உ. த.) பரீட்சை புதிய பாடத்திட்டத்தில் தகைமையடைந்த விண்ணப்பதாரிகள், பொதுப் பரீட்சைத் தாளில் ஒரு சித்தியை பெற்றிருத்தல் அவசியம்.

(5) க. பொ. த. (உ/த.) பரீட்சையில் பெற்ற இஸற் ஸ்கோர் அல்லது சராசரி புள்ளிகளின் அடிப்படையிலேயே தேர்வுகள் மேற்கொள்ளப்படும்.

(6) தகைமை பரீட்சையில் பாடத்தில் அல்லது பாடநெறிக்கு சம்பந்தமான துறையில் சித்தியடைந்த விண்ணப்பதாரிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

(7) காலை நேர பாடநெறிகளுக்காக 22 வயதுக்கு கீழ்ப்பட்டவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

(8) எந்தவொரு இலங்கைப் பல்கலைக்கழக /இணைந்த பல்கலைக்கழக கல்லூரியில், தொழில்நுட்ப கல்லூரி, கல்விக் கல்லூரி, ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி அல்லது ஏனைய மற்றும் உயர் தொழில்நுட்ப நிறுவனங்களில் ஒரு உள்ளக மாணவராக ஒரு பாடநெறியொன்றைப் பின்பற்றுபவர்கள், இலங்கை உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவனத்தில் ஒரு காலை/முழுநேர மாணவனாக பதிவுசெய்துகொள்ள முடியாது. சொல்லப்பட்ட நிறுவனங்களுடன் இணைந்துள்ள ஏதேனும் நிறுவனங்களில் முழுநேர பாடநெறிகளை ஏதும் மாணவரொருவர் மேற்கொள்வது தெரியவரின் அவர்களின் பதிவுகள் இலங்கை உயர் தொழில்நுட்ப நிறுவனத்தினால் இரத்துச் செய்யப்படும்.

(9) முழுநேர பாடநெறிக்காக தெரிவுசெய்யப்பட்ட பின்னர், மாணவர்கள் எச்சந்தர்ப்பத்திலும் பகுதி நேர் பாடநெறிக்கு இடமாற்றம் செய்யப்பட மாட்டாது.

***பகுதி 'ஆ'***

**மேற்கூறப்பட்ட கற்கைநெறிகளுக்கான தகைமைகள் கீழே தரப்பட்டுள்ளன :**

***1. உயர் தேசிய கணக்கியல் டிப்ளோமா – (உ.தே.க.டி) – காலை/முழுநேரம் :***

விண்ணப்பதாரி கீழ்வரும் தகைமைகளில் ஒன்றினைக் கொண்டிருக்க வேண்டும் :-

(i) ஒரே முறையில் தூய கணிதம் அல்லது கணக்கியலை ஒரு பாடமாகக் கொண்டு நான்கு பாடங்களில் ஆகக்குறைந்தது 2 பாடங்களில் க. பொ. த. (உ. த.) (பழைய பாடத்திட்டம்) இல் திறமைச்சித்தி அடைந்திருக்க வேண்டும் ;

கணிதம் அல்லது கணக்கியல் ஆகிய பாடங்களில் திறமை சித்தி பெற்றிருக்காவிடில் க. பொ. த. (சா./த.) இப்பாடங்களில் திறமைச் சித்தி பெற்றிருத்தல் கருத்தில் கொள்ளப்படும்.

க. பொ. த. (உ./த.) பரீட்சையில் தூய கணிதம் அல்லது கணக்கியல் ஆகிய பாடங்களில் திறமை சித்தி பெற்றிருக்காவிடில், க. பொ. த. (சா./த.) கணித பாடத்தில் திறமைச் சித்தி பெற்றிருக்க வேண்டும்.

அல்லது

(ii) க. பொ. த. (உ/த.) பரீட்சையில் (புதிய பாடத்திட்டம்) ஒரே முறையில் மூன்று பாடங்களில் இணைந்த கணிதம் அல்லது கணக்கியலை ஒரு பாடமாகக் கொண்டு சித்தியடைந்திருக்க வேண்டும். இம்மூன்று பாடங்களில் இரண்டு திறமைச்சித்திகளைப் பெற்றிருக்க வேண்டும்.

க. பொ. த. (உ./த.) இணைந்த கணிதம் அல்லது கணக்கியல் ஆகிய பாடங்களில் திறமைச்சித்தி பெற்றிருக்காவிடில், க. பொ. த. (சா./த.) கணித பாடத்தில் திறமைச்சித்தி பெற்றிருக்க வேண்டும்.

அல்லது

(iii) தொழிற்கல்வி பயிற்சி திணைக்களத்தினால் நடாத்தப்படும் கணக்கியல் தொழில்நுட்பவியலாளருக்கான தேசிய சான்றிதழைப் பெற்றிருக்க வேண்டும்.

அத்துடன்

க. பொ. த. (சா./த.) ஆங்கில பாடத்தில் சாதாரண சித்தியைப் பெற்றிருக்க வேண்டும்.

க. பொ. த. (உ./த.) பழைய பாடத்திட்டத்தில் நான்கு பாடங்களில் அல்லது புதிய பாடத்திட்டத்தில் மூன்று பாடங்களில் பெற்ற ஆகக்கூடிய புள்ளிகளின் அடிப்படையிலே தெரிவுகள் இடம்பெறும்.

*1.1* ***உயர் தேசிய கணக்கியல் டிப்ளோமா (உ.தே.க) - பகுதி நேரம் :***

விண்ணப்பதாரி பின்வரும் தகைமைகளில் ஒன்றைக் கொண்டிருக்க வேண்டும் :-

(i) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து பெற்ற பட்டம் அல்லது இடைநிலைப் பரீட்சை ;

(ii) க. பொ. த. (உ./த.) பரீட்சையில் ஒரே தடவையில் நான்கு பாடங்களில் (பழைய பாடத்திட்டத்தில்) மூன்று பாடங்களில் (புதிய பாடத்திட்டத்தில்) சித்தியடைந்திருக்க வேண்டும் ;

(iii) தொழில்கல்வி பயிற்சித் திணைக்களத்தினால் வழங்கப்படும் கணக்கியல் தொழில்நுட்பவியலாளருக்கான தேசிய சான்றிதழ் ;

(iv) தொழில்கல்வி பயிற்சித் திணைக்களத்தினால் வழங்கப்படும் வர்த்தகக் கல்வி தொடர்பான தேசிய சான்றிதழ் (கணக்கியல் துறை) ;

(v) தொழிற்கல்வி பயிற்சித் திணைக்களத்தினால் வழங்கப்படும் கணக்கியல் தொடர்பான தேசிய சான்றிதழ் ;

**குறிப்பு :**

(அ) தொழில் அனுபவம் விண்ணப்பதாரிகள் பொருத்தமான அரச நிறுவனம் ஒன்றில் பொது நிறுவனத்தில் அல்லது அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தில் கடமையாற்றியிருத்தல் வேண்டும்.

(ஆ) பின்வரும் தகுதிகளைக் கொண்ட விண்ணப்பதாரிகள் முதலாம் வருடத்திலிருந்து விலக்களிக்கப்பட்டு இக்கற்கை நெறியின் இரண்டாம் வருடத்திற்கு ஏனைய அனுமதித் தகைமைகளைப் பூர்த்திசெய்து இடமிருப்பின் அனுமதிக்கப்படுவர் :-

(i) வியாபாரக் கற்கை நிதி தொடர்பான தேசிய டிப்ளோமா ;

(ii) உயர் தேசிய வர்த்தக /முகாமைத்துவ டிப்ளோமா இரண்டாம் ஆண்டு ;

(iii) விஞ்ஞானமாணி (வியாபார நிர்வாகம்) ;

(iv) வணிகமாணி ;

(v) விஞ்ஞானமாணி (கணக்கியல்)

(vi) இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தின் (ICASL) 1 ஆம், 2 ஆம் பகுதி ;

(vii) பட்டயக் கணக்காளர், கணக்கியல் நிறுவனத்தின் (CIMA) 1 ஆம், 2 ஆம் பகுதி ;

(viii) இலங்கை கணக்கீட்டு தொழில்நுட்ப நிறுவனத்தின் (AAT) 3 ஆம் கட்டப் பகுதி ;

*2. உயர் தேசிய முகாமைத்துவ டிப்ளோமா (உ.தே.மு.டி) - (காலை /முழு நேரம்) :*

விண்ணப்பதாரி பின்வரும் தகைமைகளில் ஒன்றைக் கொண்டிருக்க வேண்டும் :-

(i) க. பொ. த. (உ./த.) பழைய பாடத்திட்டத்தில் நான்கு பாடங்களில் க. பொ. த. (உ./த.) புதிய பாடத்திட்டத்தில் ஒரே முறையில் மூன்று பாடங்களிலும் க. பொ. த. (சா./த.) ஆங்கிலம், கணிதம் ஆகிய பாடங்களில் சாதாரண சித்தியைப் பெற்றிருக்க வேண்டும்.

அல்லது

(ii) தொழிற்கல்வி பயிற்சித் திணைக்களத்தினால் நடாத்தப்படும் கணக்கீட்டு தொழில்நுட்பவியலாளருக்கான தேசிய சான்றிதழ் அல்லது வியாபார கற்கைநெறிக்கான தேசிய சான்றிதழ் (பொது நிர்வாகம், சந்தைப்படுத்தல்) அத்துடன் க. பொ. த. (சா. த.) பரீட்சையில் ஆங்கிலம், கணிதத்தில் சாதாரண சித்தியைப் பெற்றிருத்தல் வேண்டும்.

*3. உயர் தேசிய தகவல் தொழில்நுட்ப டிப்ளோமா - (உ.தே.த.தொ.டி) - (காலை /முழு நேரம்) :*

விண்ணப்பதாரி பின்வரும் தகைமைகளில் ஒன்றைக் கொண்டிருக்க வேண்டும் :-

(i) க. பொ. த. (உ./த.) (பழைய பாடத்திட்டம்) ஒரே முறையில் பௌதீகவியல், விவசாய விஞ்ஞானம், தூயகணிதம், கணக்கியல் ஆகிய பாடங்களில் ஒன்றினை உள்ளடக்கியதாக நான்கு பாடங்களில் சித்தியடைந்திருக்க வேண்டும் :-

அல்லது

(ii) க. பொ. த. (உ./த.) (பழைய பாடத்திட்டம்) ஒரே முறையில் பௌதீகவியல், விவசாய விஞ்ஞானம், விலங்கியல், தாவரவியல், இரசாயனவியல் ஆகிய பாடங்களில் ஒன்றினை உள்ளடக்கியதாக நான்கு பாடங்களில் சித்தியடைந்திருக்க வேண்டும்.

அல்லது

(iii) க. பொ. த. (உ./த.) (புதிய பாடத்திட்டம்) ஒரே முறையில் பௌதீகவியல், விவசாய விஞ்ஞானம், இணைந்த கணிதம், கணக்கியல் ஆகிய பாடங்களில் ஒன்றினை உள்ளடக்கியதாக மூன்று பாடங்களில் சித்தியடைந்திருக்க வேண்டும்.

அல்லது

(iv) க. பொ. த. (உ./த.) (புதிய பாடத்திட்டம்) ஒரே முறையில் பௌதீகவியல், விவசாய விஞ்ஞானம், விலங்கியல், தாவரவியல், இரசாயனவியல் ஆகிய பாடங்களில் ஒன்றினை உள்ளடக்கியதாக மூன்று பாடங்களில் சித்தியடைந்திருக்க வேண்டும்.

அத்துடன்

(v) க. பொ. த. (சா./த.) பரீட்சையில் ஆங்கிலம், கணிதத்தில் சாதாரண சித்தி.1995 ஆம் ஆண்டின் புதிய பாடத்திட்டத்தின்கீழ் செயற்படுத்தப்படும் க. பொ. த. (உ./த.) விவசாய விஞ்ஞானம்.

*4. உயர் தேசிய தொழில்நுட்பவியல் டிப்ளோமா (உ. தே.தொ.டி.-விவசாயம்) - (பகல் /முழு நேரம்) :*

விண்ணப்பதாரிகள் பின்வரும் தகைமைகளில் ஒன்றினைக் கொண்டிருக்க வேண்டும் :-

(i) க. பொ. த. (உ. த.) (பழைய பாடத்திட்டம்) உயிரியல் விஞ்ஞானத்தில் ஒரே முறையில் நான்கு பாடங்களில் சித்தியடைந்திருக்க வேண்டும். அவற்றில் இரண்டு இரசாயனவியல், விவசாய விஞ்ஞானம், தாவரவியல், விலங்கியல், பௌதீகவியல் ஆகிய பாடங்களாக அமைதல் வேண்டும்.

அல்லது

(ii) க. பொ. த. (உ./த.) பரீட்சையில் (புதிய பாடத்திட்டம்) உயிரியல்-விஞ்ஞானத்தில் ஒரே தடவையில் மூன்று பாடங்களில் சித்தி அடைந்திருக்க வேண்டும். அவற்றில் இரண்டு இரசாயனவியல், விவசாய விஞ்ஞானம், தாவரவியல், பௌதீகவியல் ஆகிய பாடங்களாக அமைதல் வேண்டும் :-

அத்துடன்

(iii) க. பொ. த. (சா./த.) பரீட்சையில் ஆங்கிலத்திலும் கணிதத்திலும் சாதாரண சித்தி.

*5. உயர் தேசிய ஆங்கில டிப்ளோமா (HND in English) - (காலை/பகுதி நேரம்):*

விண்ணப்பதாரி பின்வரும் தகைமைகளில் ஒன்றினைக் கொண்டிருத்தல் வேண்டும் :-

(i) க. பொ. த. (உ./த.) பரீட்சையில் ஆங்கிலம் உட்பட 3 பாடங்களில் சித்தி ;

(ii) க. பொ. த. (உ./த.) பரீட்சையில் 3 பாடங்களில் சித்தியுடன் க. பொ. த. (சா./த.) பரீட்சையில் ஆங்கில இலக்கியத்தில் சித்தியும் ஆங்கில மொழியில் திறமை சித்தி (C);

(iii) க. பொ. த. (உ./த.) பரீட்சையில் 3 பாடங்களில் சித்தியடைந்திருத்தல், க. பொ. த. (சா./த.) பரீட்சையில் ஆங்கில மொழியில் விசேட சித்தியடைந்திருத்தல் (A or B);

(iv) ஆங்கில சிறப்பு ஆசிரியர் பயிற்சிச் சான்றிதழ் அல்லது ஆங்கில ஆசிரியர்களுக்கான கல்விக் கல்லூரி டிப்ளோமா ;

(v) க. பொ. த. (உ./த.) பரீட்சையில் மூன்று பாடங்களில் சித்தியுடன் தொழிற்கல்வி பயிற்சித் திணைக்களத்தினால் நடாத்தப்படும் வர்த்தக கைத்தொழிலும் மேலதிகக் கல்வியும் தொடர்பான ஆங்கிலத்தில் தேசிய சான்றிதழ் பரீட்சையில் சித்திபெற்றிருக்க வேண்டும்.

***6. உயர் தேசிய வியாபாரக் கல்வி டிப்ளோமா - (காலை /முழு நேரம்) :***

விண்ணப்பதாரி பின்வரும் தகைமைகளில் ஒன்றினைக் கொண்டிருக்க வேண்டும் :-

(i) க. பொ. த. (உ./த.) (பழைய பாடத்திட்டம்) பரீட்சையில் பொருளியல், வர்த்தகமும் நிதியியலும், கணக்கியல் ஆகிய பாடங்களில் சித்தி அல்லது மேலே குறிப்பிடப்பட்டுள்ள மூன்று பாடங்களில் இரண்டு பாடங்களிலும் அதே பரீட்சையில் அரசியல் விஞ்ஞானம், தூய கணிதம், புவியியல், சிங்களம், தமிழ், ஆங்கிலம், அளவையியலும், விஞ்ஞானமும், வரலாறு, வியாபார கணிப்பீடு ஆகிய பாடங்களில் ஒன்றிலும் சித்திபெற்றிருத்தல் வேண்டும் ;

அல்லது

(ii) க. பொ. த. (உ./த.) (புதிய பாடத்திட்டம்) பரீட்சையில் பொருளியல், வர்த்தக கற்கைகள், கணக்கியல் ஆகிய மூன்று பாடங்களில் சித்தி அல்லது க. பொ. த. (உ./த.) பரீட்சையில் மேலுள்ள மூன்று பாடங்களில் இரண்டு பாடங்களிலும் புவியியல், மனை யியல், அரசியல் விஞ்ஞானம், அளவையியலும் விஞ்ஞானமும், விவசாய விஞ்ஞானம், இணைந்த கணிதம், வியாபாரக் கணிப்பீடு ஆகிய பாடங்களில் ஒன்றிலும் சித்தியடைந்திருத்தல் வேண்டும் ;

அல்லது

(iii) தொழில்நுட்ப கல்வி மற்றும் பயிற்சி திணைக்களத்தினால் நடாத்தப்படும் வர்த்தக சான்றிதழ் பரீட்சை (கணக்கியல் சான்றிதழ்) ;

அல்லது

(iv) தொழில்கல்வி பயிற்சித் திணைக்களத்தினால் நடாத்தப்படும் கணக்கியல் தொழில்நுட்பத்தில் தேசிய சான்றிதழ் ;

அத்துடன்

(v) க. பொ. த. (சா. த.) பரீட்சையில் கணிதத்திலும் ஆங்கிலத்திலும் சாதாரண சித்தி.

***7. வர்த்தகமும் நிதியியலிலுமான தேசிய டிப்ளோமா (வ.நி.தே.டி) - (காலை /முழு நேரம்) :***

விண்ணப்பதாரி பின்வரும் தகைமைகளில் ஒன்றினைக் கொண்டிருக்க வேண்டும் :-

(i) க. பொ. த. (உ. த.) (பழைய பாடத்திட்டம்) பரீட்சையில் பொருளியல், வர்த்தகம், கணக்கியலும் நிதியியலும் உட்பட நான்கு பாடங்களில் ஒரே முறையில் சித்திபெற்றிருக்க வேண்டும்.

அல்லது

(ii) க. பொ. த. (உ. த.) (புதிய பாடத்திட்டம்) பரீட்சையில் பொருளியல், வர்த்தகக் கற்கைகள், கணக்கியல் ஆகிய மூன்று பாடங்களில் சித்தி அல்லது மேலே குறிப்பிட்டுள்ள பாடங்களில் இரண்டு பாடங்களிலும், கீழே குறிப்பிடப்பட்டுள்ள பாடங்களில் ஒரு பாடத்திலும் ஒரே முறையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். புவியியல், மனையியல், அரசியல் விஞ்ஞானம், அளவையியலும் விஞ்ஞானமும், விவசாய விஞ்ஞானம், இணைந்த கணிதம் ;

அல்லது

(iii) தொழிற்கல்வி பயிற்சித் திணைக்களத்தினால் நடாத்தப்படும் கணக்கியல் தொழில்நுட்பவியலாளருக்கான தேசிய சான்றிதழ் ;

அத்துடன்

(iv) க. பொ. த. (சா./த.) பரீட்சையில் ஆங்கிலத்திலும் கணிதத்திலும் சாதாரண சித்தி.

**குறிப்பு :**

(1) யாழ்ப்பாணம், திருகோணமலை, சம்மாந்துறை மற்றும் மட்டக்களப்பு ஆகிய உயர் தொழில்நுட்ப நிறுவனங்களில் நடாத்தப்படும் பகுதி நேர பாடநெறிகள் தமிழ் மொழி மூலம் நடாத்தப்படும்.

(2) தெஹிவளை உயர்தொழில்நுட்ப நிறுவனத்தில் நடாத்தப்படும் உயர் தேசிய கணக்கியல் டிப்ளோமா பகுதி நேர பாடநெறி சிங்கள, தமிழ், ஆங்கில மொழிமூலங்களில் நடாத்தப்படும்.

(3) கண்டி உயர் தொழில்நுட்ப நிறுவனத்தில் நடாத்தப்படும் உயர் தேசிய கணக்கியல் டிப்ளோமா பகுதி நேர பாடநெறி தமிழ் மொழிமூலமும் நடாத்தப்படும்.

(4) 1990 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 30 ஆந் திகதியின் சுற்றுநிருப இலக்கம் 46/90 இனால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றினால் வழங்கப்பட்ட வர்த்தகப் பட்டத்திற்கு சமமானதொன்றாக (சாதாரண சித்தி) உயர் தேசிய டிப்ளோமா கணக்கியல் பாடநெறி (இறுதி) ஏற்றுக்கொள்ளப்படும்.

(5) உங்கள் தகைமைகளுக்கமைய அனுமதிக்காக கருதப்படும் பயிற்சிக்கான பாடநெறிகளை ஒழுக்குக்குமைய சுட்டிக்காட்டுக.

"உயர் தொழில்நுட்ப நிறுவனங்கள்-கல்வி ஆண்டு 2006" இற்காக மாணவர்களை அனுமதித்தல் தொடர்பாக இலங்கை உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவனத்தில் (SLIATE) பணிப்பாளர் நாயகத்தின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகக் கொள்ளப்படுமென்பதை தயவுசெய்து கவனத்திற்கொள்ளவும்.

பணிப்பாளர் நாயகம்,
இலங்கை உயர் தொழில்நுட்ப கல்வி நிறுவனம்.

இணையத்தளம் : www.sliate.net
18/2, வோர்ட் பிளேஸ்,
கொழும்பு 07.

| Course Number : …………………… |
|---|

Office use only

Specimen Application Form

## SRI LANKA INSTITUTE OF ADVANCED TECHNOLOGICAL EDUCATION

### Application for Admission to Higher National Diploma/National Diploma Course

| (i) | *Name of the Course* | *Order of Preference* | *Medium* |
|---|---|---|---|
| (1) | ……………………………… | ………………………………… | ………………………………… |
| (2) | ……………………………… | ………………………………… | ………………………………… |
| (3) | ……………………………… | ………………………………… | ………………………………… |

1. Name with Initials : ————.
2. Name/Names denoted by Initials : ————.

3. Address : ————.
4. Date of Birth : Year ————, Month ————, Day ————.
   Age (as at 01.01.2007) Years ————, Months ————, Days ————.
5. National Identity Card No. : ————.
6. Sex : Male/Female
7. Administrative District : ————.
8. (i) Result of G.C.E. (A/L) Examination (in or before 2005)
   Year : ———— Index No. : ———— Medium : ————

| *Subject* | *Grade* |
|---|---|
| 1. ———— | ———— |
| 2. ———— | ———— |
| 3. ———— | ———— |
| 4. ———— | ———— |

If under new syllabus indicate pass or fail in the general paper : ————.
Aggregate/Average marks or Z-Score of the above examination, issued by the Department of Examination : ————.

(ii) Result of G.C.E. (O/L) Examination :
Year : ———— Index No. : ———— Medium : ————

| *Subject* | *Grade* | *Subject* | *Grade* |
|---|---|---|---|
| 1. ———— | ———— | 6. ———— | ———— |
| 2. ———— | ———— | 7. ———— | ———— |
| 3. ———— | ———— | 8. ———— | ———— |
| 4. ———— | ———— | 9. ———— | ———— |
| 5. ———— | ———— | 10. ———— | ———— |

9. Highest Qualification in English as a Subject : ————.

10. Details of Occupation :
    (only for Part time/Weekend Courses)
    Post :
    E.P.F. Number :
    Place of Work and Address :
    Date of Appointment :

I hereby declare that I am not following any other full time course of study in any other State Institution. I am aware that my registration will be cancelled at any time during the period of study if it is found that I concurrently follow a full time course at any other State Institution. I hereby certify that the information furnished here is true and accurate to the best of my knowledge.

————————,
Signature of Applicant.

Date : ————.

(The Bank receipt for Rs. 250 payable to SLIATE should be annexed)

10-639

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.